Register No. [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

**FTB** **3957–18**

(For the candidates admitted from 2009-2010 to 2014-2015)

B.A.B.L. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Fifth Year – Ninth Semester

CIVIL PROCEDURE CODE

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the meaning of the term 'prescribed period of limitation' under the law of Limitation Act.

   'குறிப்பிட்ட காலவரை' என்ற சொற்றொடரை காலவரையறை சட்டத்தின் கீழ் விவரிக்க.

https://www.tndaluonline.com

2. Examine the provisions relating to the transfer of Civil suit.

ஒரு உரிமையியல் வழக்கு விசாரணை இடமாற்றத்திற்கான வகையங்களை ஆராய்க.

3. Who is a garnishee. What are his liabilities under the Civil Procedure Code?

பற்றுகைப்பொருள் வைத்திருப்பவர் என்பவர் யார்? உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் அவரது கடப்பாடுகள் யாவை?

4. State briefly the various grounds on which a court can review is own judgment?

நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை மறு ஆய்வு செய்வதற்குண்டான காரணங்களை விளக்குக.

5. Discuss in detail the procedure for filing a suit by a minor.

இளவர் ஒருவரால் வழக்கொன்று தாக்கல் செய்யப்படுவதற்கான நடைமுறை விதிகளை விவரி.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Mesne profits.

அத்துமீறிய ஆதாயங்கள்.



(b) Foreign Judgment.

அயல்நாட்டு தீர்ப்புரை.

(c) Remand.

திருப்பி அனுப்புதல்.

(d) Second appeal.

இரண்டாம் மேல்முறையீடு.

(e) Costs.

செலவுத்தொகை.

(f) Abatement of suits.

வழக்குகளை அகற்றுதல்

(g) Precept.

பற்றாணை.

(h) Execution petition for arrest.

கைது செய்வதற்கான நிறைவேற்று மனு.

(i) Res judicata.

முன் தீர்ப்புத்தடை.

(j) Notice under Section 80 of C.P.C.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அறிவிப்பு.



https://www.tndaluonline.com

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' files a suit against 'B' for Rs. 80,000/- in court 'X'. The court passes a decree for Rs. 75,000/-. 'A' files an application to amend the decree. Can the court amend it.

'A' என்பவர் 'B' யிற்கு எதிராக 'X' என்ற நீதிமன்றத்தில் ரூ. 80,000/– கேட்டு வழக்கு தாக்கல் செய்கிறார். நீதிமன்றம் ரூ. 75,000/– க்கான தீர்ப்பு வழங்குகிறது. 'A' மனு ஒன்றை தாக்கல் செய்து தீர்ப்பை மாற்றக் கோருகிறார். நீதிமன்றம் அந்த மாற்றத்தைச் செய்ய முடியுமா?

8. 'R' published a defamatory statement against 'A'. Hence 'A' filed a suit against 'R' for claiming damages. 'R' died leaving his son 'C' as his legal heir. Whether the suit will continue against 'C'.

'R' என்பவர் 'A' வுக்கு எதிராக சில அவதூறு சங்கதிகளை வெளியிடுகிறார். ஆகவே 'A' என்பவர் 'R'க்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்கிறார். அதன்பின் 'C' என்பவரை வாரிசாக விட்டு விட்டு 'R' இறந்து விடுகிறார். அந்த வழக்கு 'C' என்பவருக்கு எதிராக தொடர்ந்து நீடிக்குமா?



9. 'A' has been prosecuted in a criminal court for the offence of kidnapping and he was acquitted. After his acquittal he filed a suit against the father of the minor girl in a civil court for recovery of his expenses incurred to defend his criminal case. Whether the suit is maintainable?

"குழந்தை கடத்தல்" குற்றத்திற்காக 'A' என்பவர் மீது குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டு குற்றவியல் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று அவர் விடுதலை பெறுகிறார். அதன் பின் இளவர் பெண்ணின் தகப்பனார் மீது குற்றவழக்கை நடத்த செலவு செய்த தொகை கோரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கிறார். இந்த வழக்கு நிலை நிற்கத்தக்கதா?

10. The property of the Judgement debtor 'K' was sold by the executing Court after attachment. 'M' purchased the properties in the auction. Before attachment 'K' executed an agreement to sell in favour of 'L' relating to properties. 'L' resisted the execution petition for delivery filed by 'M'. – Decide.

தீர்ப்புக் கடனாளியாகிய 'K'யின் சொத்துக்களை நிறைவேற்று நீதிமன்றம் பற்றுகைக்குப் பின்னர் விற்பனை செய்தது. ஏல விற்பனையில் 'M' என்பவர் விலைக்கு வாங்கினார். அந்த சொத்துக்களின் பற்றுகை உத்தரவிற்கு முன்னர் 'K' என்பவர் 'L' என்பவர் பெயருக்கு விற்பனை ஒப்பந்தம் ஒன்று எழுதிக் கொடுத்திருந்தார். 'M' தாக்கல் செய்த சுவாதீன மனுவை 'L' எதிர்க்கிறார். முடிவு செய்யவும்.



https://www.tndaluonline.com

11. 'A' married 'B' at Chidambaram. They lived together at Villupuram. The wife 'B' left the matrimonial home and lives with her father at Chennai. 'A' wants to file a petition for Restitution of Conjugal rights against 'B' –Advise.

'A' என்பவர் 'B' என்பவரை சிதம்பரத்தில் திருமணம் செய்து கொள்கிறார். அவர்கள் இருவரும் விழுப்புரத்தில் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். 'B' என்பவர் தனது கணவனுடனான வீட்டை விட்டுச் சென்று தன்னுடைய தந்தை வீட்டில் சென்னையில் வசித்து வருகிறார். 'A' என்பவர் தாம்பத்திய உறவு மீட்டளிக்கக் கோரி 'B' மீது வழக்கு தொடர வேண்டும் என்று விரும்புகிறார் – ஆலோசனை கூறுக.

12. 'A' sues 'B' and 'C' on a promissory note. 'B' is the principal debtor and 'C' is the surety. An ex parte decree is passed against both. 'B' alone applies to set aside the decree and shows sufficient cause for his absence. If the decree is set aside whether it applies to 'C' or 'B' alone.

'A' என்பவர் 'B' மற்றும் 'C' என்பவர்கள் மீது கடனுறுதி சீட்டு வழக்கு ஒன்று தாக்கல் செய்கிறார். 'B' முதன்மைக் கடனாளி. 'C' பிணையாளர். இருவருக்கும் எதிராக ஒரு தலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. ஒரு தலைப்பட்ச தீர்ப்பாணையை இரத்து செய்ய போதுமான காரணத்துடன் 'B' மட்டும் விண்ணப்பிக்கிறார். தீர்ப்பாணை இரத்து செய்யப்பட்டால் 'C' என்பவருக்கும் பொருந்துமா அல்லது 'B' என்பவருக்கு மட்டும் பொருந்துமா?


https://www.tndaluonline.com